## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## Ang Mo Kio Tamil Methodist Church

**14 ஜனவரி 2024 ஞா யிறு ஆராதனை**
*14 January 2024 Sunday Service*

| | |
|---|---|
| ✝ ***ஆராதனைக்கு அழைப்பு***<br>Call to Worship | ***திருமதி.*** *ராஜம் சுரேஷ்*<br>Mrs. Rajam Suresh |
| ***இறைவணக்கப்பாடல்***<br>Introit | ***பாடகர் குழு***<br>Choir |
| ***ஜெபம்***<br>Prayer | ***திருமதி.*** *ராஜம் சுரேஷ்*<br>Mrs. Rajam Suresh |
| ✝ ***தொடக்க பாடல்***<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***ஆண்டவா பிரசன்னமாகி***

*1.ஆண்டவா பிரசன்னமாகி*
*ஜீவன் ஊதி உயிர்ப்பியும்*
*ஆசை காட்டும் தாசர் மீதில்*
*ஆசிர்வாதம் ஊற்றிடும்*

**அருள்மாரி எங்கள் பேரில்**
**வருஷிக்கப் பண்ணுவீர்**
**ஆசையோடு நிற்கிறோமே**
**ஆசீர்வாதம் ஊற்றுவீர்**

*2. தேவரீரின் பாதத்தண்டை*
*ஆவலோடே கூடினோம்*
*உந்தன் திவ்ய அபிஷேகம்*
*நம்பி நாடி அண்டினோம்*

*3. ஆண்டவா மெய்பக்தர் செய்யும்*
*வேண்டுகோளைக் கேட்கிறீர்*
*அன்பின் ஸ்வாலை எங்கள் நெஞ்சில்*
*இன்று மூட்டி நிற்கிறீர்*

*4. தாசர் தேடும் அபிஷேகம்*
*இயேசுவே கடாட்சியும்*
*பெந்தே கொஸ்தின் திவ்ய ஈவை*
*தந்து ஆசிர்வதியும்*

| | |
|---|---|
| ✝ ***மாறி வாசித்தல் 2ம் ஞாயிறு தேவ ஆராதனை புத்தகம் 18*** *"சங்கீதம் 8"* | ***சபையார் இணைந்து***<br>Congregation |

"கர்த்தரின் நாமம் எவ்வளவு மேன்மையானது"

Psalter Reading –Page 18 "Psalm 8"

| | |
|---|---|
| ✝ ***தந்தை போற்றி***<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ***துதி ஆராதனை***<br>Singspiration | |
| ***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்***<br>Thanksgiving & Pastoral Prayer | ***மறைதிரு. விஜய் ஜோஸப்***<br>Rev. Vijay Joseph |
| ***பரமண்டல ஜெபம்***<br>Lord's Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ ***காணிக்கை பாடல்***<br>Offertory Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

நம்பிவந்தேன், மேசையா, நான்

நம்பிவந்தேன், மேசையா, நான்
நம்பிவந்தேனே, - திவ்ய
சரணம்! சரணம்! சரணம் ஐயா,
நான் நம்பிவந்தேனே.

1.தம்பிரான் ஒருவனே, தம்பமே
தருவனே: - வரு
தவிது குமர குரு பரமனுவேலே
நம்பிவந்தேனே.

2. நின்பாத தரிசனம் அன்பான
கரிசனம் - நித
நிதசரி தொழுவ திதம் எனவும்
உறுதியில் நம்பிவந்தேனே.

3. நாதனே, கிருபைகூர் வேதனே,
சிறுமைதீர், - அதி
நலம் மிகும் உனதிரு திருவடி
அருளே நம்பிவந்தேனே,

4. பாவியில் பாவியே, கோவியில்
கோவியே – கன
பரிவுடன் அருள்புரி, அகல விடாதே
நம்பிவந்தேனே.

5. ஆதி ஓலொலமே, பாதுகா
காலமே – உன
தடிமைகள் படுதுயர் அவதிகள்
மெத்த நம்பிவந்தேனே.

| | |
|---|---|
| ✝ ***பூலோகத்தாரே யாவரும்***<br>Doxology | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ ***திருமறைப் பாடம்***<br>***ஆதியாகமம் 17 : 1 - 13*** | ***திரு.ஆனந்த்***<br>Mr. Aananth |

Scripture Reading :
Genesis 17:1-13

*அருளுரை* — *மறைதிரு. விஜய் ஜோஸப்*
Sermon — Rev. Vijay Joseph

*அர்ப்பணகீதம்* — *சபையார் இணைந்து*
✝ Offertory & Closing Song — Congregation

எல்லாம் யேசுவே எனக்கெல்லாம் மேசுவே

எல்லாம் யேசுவே, -
எனக்கெல்லாம் மேசுவே.

தொல்லைமிகு மிவ்வுலகில் -
துணை யேசுவே

1.ஆயனும் சகாயனும்
நேயனும் உபாயனும்,
நாயனும் எனக்கன்பான
ஞானமண வாளனும்,

2. தந்தைதாய் இனம்ஜனம்
பந்துளோர் சிநேகிதர்,
சந்தோட சகலயோக
சம்பூரண பாக்கியமும்,

3. கவலையில் ஆறுதலும்,
கங்குலிலென் ஜோதியும்
கஷ்டநோய்ப் படுகையிலே
கைகண்ட ஔஷதமும்,

4. போதகப் பிதாவுமென்
போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங்
கூட்டாளியுமென் தோழனும்,

5. அணியும் ஆபரணமும்
ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென்
பிரிய மத்தியஸ்தனும்,

6. ஆன ஜீவ அப்பமும்
ஆவலுமென் காவலும்,
ஞானகீதமும் சதுரும்
நாட்டமும் கொண்டாட்டமும்,

*அறிவிப்புகள்*
Announcements

மனப்பாட வசனங்கள் — *சபையார் இணைந்து*
✝ Weekly Memory Verses — Congregation
Genesis 17 : 7
**ஆதியாகமம் 17 : 7**

***7. உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.***

*முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்* — *மறைதிரு. விஜய் ஜோஸப்*
✝ Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

*ஆசீர்வாதப் பாடல்*
✝ Benediction Song

✝ *சபையார் நிற்கவும்* ⁄ Indicates Congregation standing